வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ராமசுப்பிரமணியன்

தேதி 24.9.2024     நேரம் மாலை 6.10 மணி

--------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 3 நாள் அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று மீண்டும் புதுடெல்லிக்குப் புறப்பட்டுள்ளார்.

நாட்டின் நீண்ட கடற்கரையை பாதுகாப்பதில் கடலோரக் காவல் படையினர் முக்கிய பங்காற்றி வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் 2-ஆம் கட்டப் பணிகளை மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் தியாகி முத்துக் குமரப்ப ரெட்டியார் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

மோடி-அமெரிக்கா

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 3 நாள் அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று மீண்டும் புதுடெல்லிக்கு புறப்பட்டுள்ளார். இப்பயணத்தின் முதல் 2 நாட்களில், குவாட்

தலைவர்களின் உச்சி மாநாட்டிலும், அமெரிக்காவில் உள்ள இந்திய சமூகத்தினர் நடத்திய மாபெரும் நிகழ்ச்சி ஒன்றிலும் பிரதமர் கலந்து கொண்டார்.

பயணத்தின் 3-ஆம் நாளில், பிரகாசமான எதிர்காலத்திற்கான பலதரப்பு முயற்சிகள் என்பது குறித்து ஐ நா பொதுப் பேரவையில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் அவர் பேசுகையில் மனிதகுலத்தின் வெற்றி, வலுவான ஒத்துழைப்பில் அடங்கி உள்ளதே தவிர, யுத்த களத்தில் அல்ல என்றார். டிஜிட்டல் பொது சுகாதாரக் கட்டமைப்பு, உலக நாடுகளுக்கு இடையிலான பாலமே அல்லாது, தடுப்புச் சுவர் அல்ல என்று அவர் குறிப்பிட்டார். உலக அளவிலான பலதரப்பு அமைப்புகளில் இன்றைய தேவைகளுக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். ஐ நா பொதுப் பேரவை கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே, நியுயார்க்கில் உக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி-யை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார். உக்ரைன்-ரஷ்யா பிரச்சனைக்கு, நிரந்தரமான அமைதித் தீர்வு காண, இந்தியா இயன்ற எல்லா உதவிகளையும் வழங்கும் என அவர் உறுதி அளித்தார். தொடர்ந்து, வியட்நாம் பொதுவுடமைக் குடியரசின் அரசுத் தலைவரும், வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலருமான திரு டோ லாம், ஆர்மீனியா பிரதமர் திரு நிகோல் பாஷின்யான், மற்றும், கத்தோலிக்க

திருச்சபைகளுக்கான Holy See ஆளுகை அமைப்பின் வெளியுறவு செயலர் கர்தினால் பீட்ரோ பாரோலின் ஆகியோரையும் பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

முர்மு

கணக்குத் தணிக்கை அமைப்புகள் திறம்பட்ட முறையில் செயல்பட தொழில் நுட்ப முன்னேற்றங்களை உடனுக்குடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த உயர்நிலை தணிக்கை அமைப்புகளின் 16-ஆவது பேரவைக் கூட்டத்தை தொடக்கி வைத்துப் பேசிய அவர், நடப்பு தொழில் நுட்ப யுகத்தில் மக்களுக்கான அரசின் சேவைகள் பெரும்பாலும் தொழில் நுட்ப வசதிகள் மூலமாகவே வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினார். செயற்கை நுண்ணறிவு, டேட்டா பகுப்பாய்வு, ஜிபிஎஸ் போன்ற தொழில் நுட்பங்கள் நவீன ஆளுகையின் முதுகெலும்பாகவே மாறி வருவதாகவும், டிஜிட்டல் பொது சுகாதார வசதிகள், டிஜிட்டல் பொருளாதாரத்தின் அஸ்திவாரமாக திகழ்வதாகவும் அவர் கூறினார். மக்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பணிகளை, திறம்பட்டதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மேம்படுத்துவதில், டிஜிட்டல் அடையாளமும், மின்ஆளுகை வசதிகளும் முக்கிய பங்களித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அதேசமயம் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை அணுகுவதிலும், டிஜிட்டல் திறன்களை பெறுவதிலும் பெண்கள் பின்தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளதால் சமத்துவமின்மை அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதில் உயர்நிலை தணிக்கை அமைப்புகள் முக்கிய பங்காற்ற முடியும் என்று குடியரசு தலைவர் கூறினார். பெண்கள் உட்பட அனைவருக்கும் ஏற்றதாக பொது சுகாதார வசதிகளை வடிவமைத்து அமல்படுத்த வேண்டிய பொறுப்பும் அதற்கான வாய்ப்புகளும் உயர்நிலை தணிக்கை அமைப்புகளுக்கு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பொதுத் துறை தணிக்கை அமைப்புகளின் பணிகள், பாரம்பரிய தணிக்கை எல்லைகளுக்கு அப்பாற்பட்டதாக விரிவடைந்து விட்டதாகவும் மக்கள் நலத் திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் சென்று சேர்கிறதா என்பதை உறுதிப்படுத்தும் பணி, தணிக்கையின் முக்கிய நோக்கமாக மாறிவிட்டதாகவும் குடியரசு தலைவர் மேலும் கூறினார்.

ஆசிய உயர்நிலை தணிக்கை அமைப்புகளின் 16-ஆவது பேரவைக் கூட்டத்தில், 48 நாடுகள் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகளில் இருந்து சுமார் 200 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். நடப்பாண்டு முதல், வரும் 2027-ஆம் ஆண்டு வரையுள்ள காலத்திற்கான இந்த அமைப்பின் தலைமை பதவியை மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி திரு கிரிஷ் சந்திர முர்மு ஏற்றுள்ளதும் குறிப்பித் தக்கது.

*ஜெய்சங்கர்*

வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று நியுயார்க்கில் ஐ நா பொதுப் பேரவைக் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே பங்களாதேஷ் அரசின் வெளி விவகாரங்கள் துறை ஆலோசகர் திரு தவ்கீத் உசேனுடன், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். கடந்த மாதம் பங்களாதேஷ் பிரதமர் பதவியில் இருந்து திருமதி ஷேக் ஹசீனா நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, திரு முகமது யூனுஸ் தலைமையில் அந்நாட்டில் அமைந்துள்ள இடைக்கால அரசுக்கும், இந்தியாவிற்கும் இடையே, முதலாவது உயர்நிலை கூட்டமாக இந்த சந்திப்பு அமைந்தது. இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், பரஸ்பர அக்கறை உள்ள பிரச்சனைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது.

*நிர்மலா*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஆளுநர்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இன்று உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கெண்ட் சென்றுள்ளார். இக்கூட்டம் நாளை நடைபெற உள்ளது. ஆசிய உள்கட்டமைப்பு வளர்ச்சி வங்கியில் 2-ஆவது பெரிய பங்குதாரராக இந்தியா திகழ்கிறது. வங்கியின் ஆளுநர்கள் குழுக் கூட்டத்தில் ஆசிய

நாடுகளின் வளர்ச்சி திட்டங்களுடன் தொடர்புடைய, உலக அளவிலான பல்வேறு முக்கிய பிரச்சனைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும். இந்தியாவிற்கும் உஸ்பெகிஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு முதலீட்டு உடன் பாட்டிலும். நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கையெழுத்திட இருக்கிறார். இந்த 5 நாள் பயணத்தின் போது உஸ்பெகிஸ்தான் அதிபரையும் பல்வேறு நாடுகளின் நிதி அமைச்சர்களையும் அவர் சந்திப்பார்.

கடலோரக் காவல்

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், இந்திய கடலோரக் காவல் படையின் கமாண்டர்களுக்கு இடையிலான 41-ஆவது மாநாட்டை தொடக்கி வைத்தார். உலக அளவில் உருவாகி வரும் புதிய, புவி-அரசியல் சூழல், மற்றும், கடல்சார் பாதுகாப்பில் உள்ள சிக்கல்களுக்கு ஏற்ப கடலோரக் காவல் படையின் நிர்வாகம், செயல்பாடுகள் மற்றும் தந்திரோபாய முறைகளை வடிவமைப்பது குறித்து பயன் உள்ள விவாதங்களை மேற்கொள்வதற்கான மேடையாக, இந்த 3 நாள் மாநாடு அமைந்துள்ளது. மாநாட்டின் தொடக்க விழாவில் பாதுகாப்பு அமைச்சர் பேசுகையில் இந்தியாவின் நீண்ட கடற்கரையை பாதுகாத்து நாட்டின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தையும் தொடர்ச்சியாக கண்காணித்து வரும் கடலோரக் காவல்

படை தான், இந்தியாவின் முக்கிய பாதுகாப்பு படை என்றார். ஆயுதக் கடத்தல், போதைக்கடத்தல், மற்றும் மனிதகடத்தல் போன்ற சட்டவிரோத செயல்பாடுகளை தடுப்பதிலும், கடலோர காவல் படையினர் முக்கிய பங்காற்றி வருவதாக அவர் கூறினார். உள்நாட்டு அளவிலான பேரிடர்களில் இருந்து நாட்டை பாதுகாப்பதிலும் கடலோரக் காவல் படையினரின் பங்களிப்பு, ஈடு -இணையற்றது என்று அவர் குறிப்பிட்டார்.

கடலோரக் காவல் படை மற்றும் ஆயுதப் படைகளை நவீனமாக்கி வலுப்படுத்த அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் கூறினார். பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்டும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, கடலோரக் காவல் படைக்கான 31 கப்பல்கள், இந்திய கப்பல் கட்டும் தளங்களில் கட்டப்பட்டு வருவதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

*புகையிலை இல்லா இளைஞர்கள்*

புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் 2-ஆம் கட்டப் பணிகளை மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். புகையிலையின் பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து இந்த இயக்கத்தின் போது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

புகையிலையின் பயன்பாட்டினால், இந்தியாவில் ஆண்டு தோறும் சுமார் 13 லட்சம் பேர் உயிர் இழப்பதாக அமைச்சர் தெரிவித்தார். புகையிலையை பயன்படுத்துவதால் புற்றுநோய் மட்டுமின்றி வேறு பல நோய்களும் ஏற்படும் என்பதால் புகையிலை இல்லாத் தலைமுறை ஒன்றை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்று அவர் கூறினார். இளைய தலைமுறையினர் தான் நாட்டின் எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டே, புகையிலை இல்லாத இந்தியா ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புகையிலை பழக்கத்தில் இருந்து இளைஞர்களை மீட்க, நாடெங்கிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை மையங்களை அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார்.

புகையிலைப் பழக்கத்தில் இருந்து இளைஞர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு அண்மையில், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு அறிவுறுத்தி உள்ளது. புகையிலை இல்லாத கல்வி நிலையங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தீவிரமாக அமல்படுத்துமாறு மத்திய கல்வி அமைச்சகமும், சுகாதார அமைச்சகமும் இணைந்து, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலர்களுக்கு அறிவுறுத்தி உள்ளன.

முத்துக்குமரப்பா

புதுச்சேரியில் தியாகி முத்துக் குமரப்ப ரெட்டியார் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. நெட்டப்பாக்கம் காவல் நிலையம் அருகே அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஜம்மு-காஷ்மீர்

ஜம்மு-காஷ்மீரில், ஸ்ரீநகர், ரஜோரி உள்ளிட்ட 6 மாவட்டங்களைச் சேர்ந்த 26 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்த 2-ஆம் கட்ட தேர்தலில் , மொத்தம் 239 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் உள்ளனர். காஷ்மீரில் இருந்து புலப் பெயர்வுக்கு ஆளான சுமார் 15 ஆயிரத்து 500 காஷ்மீர் பண்டிட் வாக்காளர்களும், நாளைய தேர்தலில் 24 வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். ஜம்மு-காஷ்மீரில் கடந்த 18-ஆம் தேதி நடைபெற்ற முதல் கட்ட சட்டமன்ற தேர்தலில் 61 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாயின. 3-ஆவது மற்றும் இறுதி கட்ட ஜம்மு-காஷ்மீர் சட்டமன்ற தேர்தல், அக்டோபர் 1-ஆம் தேதி நடைபெறும்.

*ஜவுளி-தூய்மை*

மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் நாடு முழுவதிலும் உள்ள தனது சார்பு அலுவலகங்களுடன் இணைந்து, தூய்மைப் பராமரிப்புக்கான, ஸ்வச்தா இயக்கத்தில் பங்கேற்றுள்ளது. இந்திய சணல் கழகம், நவநாகரீக ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பக் கழகம், டெக்ஸ்டைல் கமிட்டி உள்ளிட்ட தன்னாட்சி அமைப்புகளும் இந்த இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. புதுடெல்லியில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற ஸஃபாய் மித்ரா சுரக்ஷா முகாமில் துப்புரவு பணியாளர்களுக்கு முகக் கவசம், சானிடைசர் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. நவநாகரீக ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பக் கழகத்தின் வளாகங்களில் வீதி நாடகம் உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. டெக்ஸ்டைல் கமிட்டி, தமது தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கான சைபர் சுகாதார முன் முயற்சி ஒன்றை தொடக்கி உள்ளது. சைபர் சுகாதாரம் பற்றிய ஊழியர் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் ஆன்டி-வைரஸ் மென்பொருள் வெளியிடப்பட்டது.

*அறுவை சிகிச்சை*

புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை, ரோபோட்டிக் அறுவை சிகிச்சைக்கான பயிற்சி மையம் ஒன்றை அமைக்க, இன்டியூட்டிவ் என்னும் தொழில் நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து

கொண்டுள்ளது. சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் பொதுவான அறுவை சிகிச்சைகளை இயந்திரக் கை உதவியுடன் மேற்கொள்வதில் டாக்டர்கள் மற்றும் இணை மருத்துவ பணியாளர்களுக்கு, இம்மையத்தில் பயிற்சி அளிக்கப்படும். புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள ரோபோட்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் நாட்டின் இதர பகுதிகளைச் சேர்ந்த டாக்டர்களுக்கு இப்பயிற்சிகளை வழங்குவார்கள் என்றும் எய்ம்ஸ் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 3 நாள் அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று மீண்டும் புதுடெல்லிக்குப் புறப்பட்டுள்ளார்.

நாட்டின் நீண்ட கடற்கரையை பாதுகாப்பதில் கடலோரக் காவல் படையினர் முக்கிய பங்காற்றி வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

புகையிலை இல்லா இளைஞர்கள் இயக்கத்தின் 2-ஆம் கட்டப் பணிகளை மத்திய சுகாதார துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் தியாகி முத்துக் குமரப்ப ரெட்டியார் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 24.9.2024/Script.